
அம்மா
Pax Ravichandra
pax.ravichandra@gmail.com
20.09-2024
+94763223960


அம்மா	
1	அம்மா
2	இது என் நாடு
3	பூங்கொத்து
4	என் நண்பி

அம்மா

அன்னையே தெய்வம்-வாழும்
தெய்வத்தை அழைக்கப் பிள்ளை-இதயத்தால்
உச்சரிக்கும் மந்திரமோ அம்மா



ஆறறிவுக்கெட்டாத இன்பம் அம்மா
இறைவன் தாய்மையோடு கலந்த
ஆழ்ந்த இரகசியம் அம்மா



குழந்தை உள்ளத்தவருக்கே புரியும் பரகசியம்
புரிந்தால் அவளோடு வாழும் உலகே மோட்சம்
வாழும் வாழ்வே நாளும் கொண்டாட்டம்
தாயன்போ தவமின்றிக் கிடைத்த வரம்

துன்பத்தை தாங்குகையில் அவளோ துன்புறும் கிறிஸ்து
போராட்டமான வாழ்வை விளையாட்டாய்
எதிர்கொள்கையில் அவளோ குருஷேத்திரக் கண்ணன்
ஞானப் பாதையில் என்னை நடத்திடும் கௌதமர்,
ஒரு சுடராய் மறைந்து போகையில் பெருமான் புத்தர்

வாழும் குடிலும் அவளால் மாளிகையானது
அன்னை போனபின் உலகோ நிலவில்லா வான் ஆனது,
குயில் தோப்பாய் அவளோடு குதூகலம்
தோகையின் நடனமாய் அவள் அழகில் பரவசம்





அம்மா சொல்லல்ல பூஜிக்கும் தோத்திரம்
தாய் உதிரமும் சதையும் தந்த உறவல்ல
படைப்பின் மகத்துவம், அறிவு கடந்த
இதயப் பரிணாமத்தின் உச்சம்

அன்பின் உச்சம் தொடும் பெண்மை,
அவள் உழைப்பில் அழகிய கனவுகள், உதிரத்தால்
நெய்த உறவில் அவள் இட்ட வண்ணக்கோலங்கள்,
அவள் மௌனத்திலும் சப்த சுரங்கள், தன்னையே
மெழுகாய் எரித்திடும் ஆனந்தப் பரவசங்கள்

எங்கிருந்தாலும் என்னைத் தழுவும் தென்றலாய்,
அவள் நேசம், மலரோடு கலந்த வண்ணமும்,
வாசமுமாய் அவள் பாசம், தாயோ வாழும் தெய்வம்
வாழும் உயிர்களுக்கெல்லாம் இறை இந்த பெருஞ்செல்வம்

தாயன்பிற்கு நிகரானது ஏதுமில்லை
தாய் என்ற உறவே இறைவன் நம்மோடு
வாழும் பேரின்ப நிலை,

என்றுமே அழியாதது அவள் அன்பு
மழையும், மண்ணும் கலந்த உறவாய்
என் நெஞ்சில் நிலைத்த அவள் பாசம்-அம்மா
மடிந்தாலும் அழியாத வண்ண ஓவியம்

அம்மா என்பது இதயத்தின் பேரழகு
பிள்ளைக்கு மட்டும் புரிந்த
அன்பின், தியாகத்தின் பேருணர்வு



காதலும் மாறலாம், கனவுக் கன்னியர்
அழகும் குலையலாம், மாறாத பேரழகு
என் அன்னையின் இதயம் ஒன்றே
என்றும் என் கனவுக்கன்னி என் தாயே



உலகப் பேரழகிகள் மத்தியில்
என்னாளும் என் பேரழகி அன்னையே
இது குழந்தை இதயத்தால் தேர்ந்த உண்மை
தாய், பிள்ளை பந்தத்தின் மேன்மை

உதரத்தில் பத்து மாதம் சுமந்து,
முப்பத்திரண்டு நிறமூர்த்த இழைகளால்
இரவும் பகலும் ஓயாது உதிரத்தால்
தாய்மை நெய்யும் பொன்னாடை குழந்தை

தன் உதிரத்தைப் பாலாக்கி அன்னையூட்டும் அமுதாய்
முதல் உணவு, கருப்பையில் தொப்பிள் கொடியால்
கட்டிய தூளியில் தாலாட்டும் அம்மை-குழந்தை
பிறந்தபின் தன் சேலையில் தூளி கட்டி
பாடும் தாலாட்டோ தேவராகத்திலும் மேன்மை

கண்ணுறங்காது காத்திடும் அன்னையோ
காக்கும் தெய்வம், தன் ஊனையும்
உதிரத்தையும், உழைப்பையும் ஈந்திடும்
மேன்மையில் தாய்மையோ வாழும் தெய்வம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-18-09-2024

இது நம் நாடு

அரச மருத்துவம் சேவையாயில்லை
தனியார் மருத்துவமோ அரச வைத்தியர்களால்
வியாபாரமான அவல நிலை
இலவசக் கல்வி தரமானதாயில்லை-ஆசிரியர்கள்
கல்வியைப் விற்றிடும் விபச்சார நிலை



சட்டம், நீதியில் சலவை செய்தும் போகாத ஊழல் கறை,
அரசியலோ இனவாத, மதவாத அமாவாசை
இருளுக்குள் வாழும் இருண்ட நிலை, செல்வர்
கோடிஸ்வரராக, ஏழைகள் பரதேசியாகும் அவல நிலை



ஊழல் அரசியல்வாதிகளால் நாட்டின் பொருளாதாரம்
அதலபாதாளத்தில் விழுந்த நிலை, வரிச்சுமைகளால்
கூனிய மத்திய, ஏழை வர்க்கம் , சுகபோக வாசிகளாய்
கொள்ளையிட்ட அரசியல்வாதிகளின் குடும்பம்

கல்விமான்களும், நல்லோர்களும் அஞ்சி ஒதுங்கிட
நாறிடும் அரசியலில் கொடிகட்டிப் பறக்கும் திருடர்,
முன்னாள் போராளிகள், இனவாதம், மதவாதம்
இழிந்த விபச்சாரமான அரசியல் சித்தாந்தம்

தேர்தல் விஞ்ஞாபனமோ கட்டுக்கதை, சமத்துவம்,
இன மத ஒற்றுமையோ அரிதாரம் பூசி ஆடும்
தெருக்கூத்தான அவல நிலை, வாழ்வாதாரமின்றி வாடும்
ஏழைகள் வாழ்வோ வான் பார்த்த பூமியான துன்ப நிலை



பிக்குகளின் பிரித் போதனைகள், தலை தாழ்த்தி
பாத பூஜை செய்து நூல் கட்டி, திருட்டு
அரசியல்வாதிகளை புனிதர்களாகும் வேசித்தனங்கள்
நீறு பூசி, மகுடம் சூட்டி, ஆசிர் வழங்கும் இந்துப் பூசாரி,
மௌலவிகளோடு தொழுது இன்புறும் அரசியல் வாதம்,
தேர்தல் காலங்களில் திருட்டு ஓநாய்களின
மதம் கடந்த அரசியல் வேடம்


வாக்கு வங்கியை நிறைக்க, ஏழைகளுக்கு
கைமாறும் கறுப்புப் பணம், தமிழர்களை ஏமாற்ற
வேசி மக்களின் தமிழ் தேசியம்,
புலி வேஷம், சமஷ்டி என்னும் மாய மந்திரம்

விழித்தெழு ஈழ மக்களே! வீறு கொண்டெழு
ஒன்றே குலம், ஒன்றே தேசம்
இனம், மதம், மொழி கடந்து எல்லோருக்கும்
சமத்துவம், சமவுரிமை வழங்கிட
நல்லாட்சி அரசு அமைந்திட வாரீர் தோழர்களே

தரமான கல்வி, உயர்தரமான மருத்துவம்
ஊழல் அற்ற அரசாங்கம், புத்தி ஜீவிகளும்
தொழில்சார் வல்லுனர்களும், உழைக்கும் வர்க்கமும்
ஒன்றுபட்டு கட்டி எழுப்பும் புதிய தேசம்

வளங்களைப் காத்து , விவசாயம், மீன்பிடி, கால் நடை,
ஆடைக் கைத்தொழில் , சுற்றுலாத் துறை, மேன்மையுற
கைத்தொழில் பேட்டைகள் அமைத்து, உயர் கல்வியை
உன்னத நிலைக்கு உயர்த்தி, ஏற்றுமதிப் பொருளாதாரம்
ஏற்றம் காண, உள்ளூர் உறபத்தி பெருகிட
விவசாயி தலை நிமிர்ந்து நடந்திட -புதிய அரசியல்
தலைமைத்துவத்தை அரியணை ஏற்றுவோம்

ஒரு துளி மழை நீரும் கடலில் சேரா வண்ணம் சேமித்து
கங்கைகளை இணைத்து வரண்ட நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவோம்,
வளமோடு நாளைய தலை முறை வாழ, சூழலையும்,
கடல் வளத்தையும், கனிய வளங்களையும் காப்போம்



உண்மை, அன்பு, நேர்மை, ஊழல் ஒழிந்திட
வாழ்வு நம் தவமாகட்டும், மத, இன வாதங்கள்
மக்கி மடிந்து போகட்டும், நாளை நமதல்ல
இன்று நமதே, விழித்தெழு மக்களே! விழித்தெழு

பொன்னான வாக்கை மண்ணாக்காமல்
வீறுகொண்டெழுந்து புரட்சித் தலைமைக்கு வாக்களி,
சட்டம், ஒழுங்கு எல்லோர்க்கும் ஒன்றே-சாக்கடை
அரசியல்வாதிகளைத் தூக்கி சிறையில் எறி



புது விடியல் காண மனிதமே விழித்தெழு
நல்லாட்சி அமைக்க தேசமே விழித்தெழு
வீறு கொள்-இது நம் நாடு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-09-2023

பூங்கொத்து



பலமணி நேரம் சுட்டெரிக்கும் வெயிலில் நடந்து களைத்த
வழிப்போக்கர் மனம் வாடிட, களைப்பாற நிழல்தரும்
சோலையை நாடி மனம் ஏங்கிட, புத்துயிர் தரத் தழுவிய
சீதளத் தென்றல் வாருங்கள் என்றே வழிகாட்டிட நடந்த சீடர்



தென்றல் வரும் திசைநோக்கி நடந்தவர்
விழிகள் கண்டதோ அழகிய பொற்றாமரைக் குளம்
நீராடி மகிழ்ந்தவர் அல்லியும், தாமரையும், ஆம்பலும்
பூத்தாடும் குளத்தைப் போற்றி மலர் கொய்தார்

சிவப்பு, நீலம், வெள்ளை எனக் கலந்த பூங்கொத்து
பச்சிலைகளோடு பசுமையைப் பறைசாற்ற
காண்பவர் மனதை கவரும் மலர்ச்செண்டு
கண்ட செல்வரோ ஒரு பொன் தருகிறேன் தாருங்கள்



மறுத்தவர் வழி நடந்திட மற்றோர் செல்வரோ
பத்துப் பொற்காசுகள் தருகிறேன் எனக்குத்
தாருங்கள் மலர்ச் செண்டை, மறுத்தவர் நடந்திட
பரிவாரங்களோடு எதிரே வந்த மன்னன்



குடிமகனே எது கேட்டாலும் தருகிறேன்
எனக்குத் தாருங்கள் அழகிய மலர்க்கொத்தை
மனம் கவரும் மலர்கள், மனதிற்கோ புத்துணர்ச்சி,
மாமனிதருக்கு வழங்கிட அரிய பரிசு

பணிவோடு மறுத்தவர், தம் வழி நடந்திட
மனதிலே கேள்வி, இவர்கள் எங்கே செல்கின்றார்கள்?
வந்த வழியே மன்னன் செல்லும் திசை நோக்கி
பாதங்கள் நடக்க, நெஞ்சோடு அணைத்த பூங்கொத்து





அந்தி மாலை அழகிய சோலையில் அமைதி கண்ட பெருமான்
புத்தர் அமர்ந்திருக்க, வழியில் கண்ட செல்வர்களும்,
மன்னனும் பணிவோடு முன்னே அமர்ந்திருக்க, இன்னிசையாய்
ஒலித்த தம்மத்தின் நாதத்தில் கருணையும், சுடர்விடும் ஞானமும்

செவிகேட்க இன்பமான போதனையோ நாதம்,
நடைப்பிண மனம் புத்துயிர் பெற ஞான புத்தரின்
கீதையோ கருணையின் புதிய வேதம்

மழித்த சிரசும், சீவர ஆடையும், உதித்த கதிரோனாய்
சுடர்விடும் ஞானமும், புன்னகையில் கனிந்த கருணையும்
கண்டவர் மனதை கொள்ளை கொள்ளப் பணிந்து
வணங்கியவர் பணிவோடு அளித்த பூங்கொத்து





மகிழ்வோடு வாங்கிய பெருமான் கனிவோடு கேட்டார்,
ஒரு பொன் கேட்டார் ஒருவர் மறுத்தீர், பத்துப் பொன் கேட்டார்
மற்றொருவர் அப்போதும் விற்க மறுத்தீர், நாடாளும் மன்னரோ
எது கேட்டாலும் தருவேன் என்றார், நீரோ இல்லையென்றீர்

ஏன் எமக்கு இதை ஏழை நீர் பரிசளித்தீர்?
ஐயனே உம்மைக் கண்டதும் என் மனம்
கனிந்தது, உள்ளம் நேசத்தால் பொங்கியது
காணாத அமைதி மனதில் நிலவியது



மகா புருஷர் நீர் என இதயம் கூறியது, ஐம்புலனும்,
அறிவும் தாள்பணிய இதயம் தங்களை வணங்கி இன்புற்றது
ஏழையிடம் இருப்பது பூங்கொத்து ஒன்றே, பெருமானுக்களித்து
இன்புறுவதே முறையென்று இதயம் கூறி இன்புற்றது



கண்டதும் உள்ளம் குளிர, வைகையாய் உவகை
பெருக்கெடுக்க, விழிகளில் ஆனந்தக் கண்ணீர் ததும்ப,
இதுவரை அறியாத இன்பத்தை இதயத்தில் அறிந்தேன்,
காணிக்கையாய் மலர்களை தங்களுக்கு ஈந்தேன்

ஏழையின் செல்வம் இதுவே, ஏற்று என்னை மகிழ்வித்தது
தங்கள் கருணையே, கனிவோடு நோக்கிய பெருமான்-
அன்போ மனமுவந்தளிக்கும்- வணிகமோ விலைபேசும்-
என்றும் வற்றாத கருணையை தங்களுக்கு அளிக்கிறேன்



உள்ளம் உதயம் கண்ட மலராய்ப் பூத்தாட
இதுவரை அறியாப் பேரின்பத்தை இதயம் சுவைக்க
மனமுவந்து மலர்களை அளித்து, பாதம் பணிந்த ஏழை
பெருமானுக்கு அடியவன் காணிக்கை என்ற மேதை




வாழ்திய பெருமான் அன்பே தன்னைக் கொடுக்கும்-
அன்பினால் உங்கள் இதயம் பொங்கித் ததும்ப என் ஆசீர்கள்,
அன்பினால் இன்புற்ற உள்ளங்கள் மகிழ்ந்திட,
சுடரிலிருந்து சுடர் தாவிட ஒளிர்ந்த கருணை மனம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-9-2-24

இனிய உறவு



சுந்தரியும், ஈஸ்வரனும் ஒன்றான சுந்தரேஸ்வரி,
அழகும், அன்பும் நிறைந்த இனிய உறவான சகோதரி
காணுமிடமெல்லாம் Pax என கூவியழைத்து
உறவுகொண்டாடும் நண்பி, காலமானதை எண்ணிப்
புலம்பும் மனதில் ஆறாத காயங்களின் வலி



ஒன்றாய்ப் படித்த மூன்றாண்டுகளில்
ஒரு மொழியும் பேசாத பிரமசாரி,
வேலைக்குப் போகும் வழியில்-கண்டு
கதைபேசி உரிமையோடு உறவாடும் சகோதரி

கலகலப்பான சுபவம், கதைபேசிச்
சிரிக்கும் அழகில் நட்பின் பாவம், தாயாய்,
சகோதரியாய், நண்பியாய் உறவு-மனதில்
இன்று நான் மீண்டும் தனிமரமான நிகழ்வு

என் நெஞ்சுக்குள் பூகம்பம் வெடிக்க
விழிகளில் கண்ணீர் தேங்க,
ஒன்றாய்ப் படித்த காலத்தை, உறவாடிய
நாட்களை எண்ணிப் புலம்பும் மனசு



வந்ததும் உன்னால் இறைவா உலகில் வாழ்வதும்
உன்னால்-மீண்டும் உன்னிடம் வருவதும் உன்னால்
புரிந்தால் உலகே சத்திரம் புரிவதும் உன்னால்

கொண்டு வந்ததும் ஏதுமில்லை, கொண்டு போவதும்
ஏதுமில்லை அன்பும், உண்மையும் நம் இயல்பு
வாழும் இறைவனோ நம்முள் உறைவு

அழகிய நட்பு, கள்ளங்கபடில்லாத உறவு, காலவெள்ளம்
நம்மைப் பிரிக்க, சேருமிடமோ இறை சந்நிதி எனப் புரிய
மனதில் சாந்தி, மலர் சூடி, மஞ்சள் குங்குமமம் சூடி
சுமங்கலியாய் இறைவன் உன்னை அழைத்த நிகழ்வு

இறை மடியில் இன்று நீ , உன் ஆன்மாவிற்கோ
ஆனந்த சாந்தி, சத்தியம், சிவம் சுந்திரமாய் சுந்தரேஸ்வரி
அன்புத் தங்கையாய் உறவாடிய சிநேகிதி , விழிகளிலே ஈரம்
நெஞ்சிலே இமயப் பாரம், அன்னையே நீ வாழ்க

A gentle soul, with hands so kind,

A healer's heart, a brilliant mind,

She studied with us, side by side,

With dreams of helping others, wide.



Her smile, a light that never dimmed,

Her laughter, like a breeze, skimmed,

Through halls where knowledge bloomed and grew,

A friend, a sister, pure and true.



She cared for all with tender grace,

Her hands brought comfort, pain erased,

A dentist's skill, a mother's care,

In every touch, her love laid bare.

But now the light that warmed the air

It is gone too soon, and it’s hard to bear.

Her heart was so full of gentle love,

Now watches from the skies above.



A mother’s warmth, she gave so free,

Her kindness lives in memory,

Though she’s no longer by our side,

In their heart, her spirit will abide.

Gone from this world, but not from thought,

The lessons of her love she taught,

Forever etched in those she knew—

A soul so bright, a heart so true.

In memory of my friend Sundaredwary

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-15-09-2024

வெண்ணிலா





பூ விழிகள்தான் பூத்துாவி காதல் சொல்ல,
புன்னகைதான் இதயத்தை தென்றலாய் வருடிச் செல்ல,
விண்தாண்டி வந்த தேவதையோ நங்கை, நெஞ்சுக்குள்
நினைத்தாலே இனிக்கும் தேன்வதையாய் மங்கை

வண்ணம்தான் மலரைச் சொல்ல, மல்லிகை
வாசம்தான் மனதை கொள்ளை கொள்ள
எண்ணம்தான் கவிதை சொல்ல-என்
இதயம்தான் துள்ளிச் சொல்லியது காதல்

காணும்போதெல்லாம் மனதிலே ஆனந்த ராகம்
மனதை கொள்ளை கொண்ட மங்கையால் நாளும்
வாழ்விலே பூபாளம், என் காதல் வானத்து தேன்நிலவு
அமாவாசை காதலர் காணாத இரவு

சாயலில் தோகை, சந்தத்தில் அஞ்சுகத்தின்
பாஷை, கானத்தில் குயிலின் தேவராகம்
காதலர் உள்ளத்தில் ஓயாத ஆனந்த ராகம்
வாழ்வோ நாளும் தேன்நிலவான வரம்





எண்ணம்தான் காதலை பண்ணாய்ப் பாடிச் சொல்ல,
பெண் வண்ணம்தான் நாணத்தை அள்ளிப் பூசிக் கொள்ள,
கன்னம்தான் கிண்ணம் பழத்தைச் சொல்ல,
பன்னமாய் பூத்த உடல் என் நெஞ்சில் படர்ந்திட
இதயத்தில் பூத்த காதல்தான் என்னே!

பொன்னகையைப் பரிசளித்தேன்
புன்னகைத்த மதிவதனி,
சிலம்பைப் பரிசளித்தேன், நடையோ
நாட்டியமான கண்ணகி

பொற்குண்டலங்களைப் பரிசளித்தேன்
சூடி ஆடிய மங்கையோ குண்டலகேசி,
என்னைக் கையளித்தேன் தன்னைச்
சூடித்த தந்த ஆண்டாளாய் கோதை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-9-2024